செ.வெ.எண். 22/செப்டம்பர் நாள் : 14.09.2018

**தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வது மற்றும் பதுக்கி வைப்பது கண்டறியப்பட்டால் அவர்களின் உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் உடனடியாக எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை.**

தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வது குற்றமாகும். தருமபுரி மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வது மற்றும் பதுக்கி வைப்பது கண்டறியப்பட்டால் அவர்களின் உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் உடனடியாக எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும் எனவும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வது குறித்த புகார்கள் மற்றும் உணவு குறித்த அனைத்து புகார்களுக்கும் உணவு பாதுகாப்புத்துறையின் Whats app complaint எண்ணிற்கு (9444042322) தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும், தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**